


To

BOOK POST

If Undeliveried please return to ...
Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852



## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 03.02.2023 | Friday | | Preaching | Manjalumoodu |
| 04.02.2023 | Saturday | 10.00 am<br>4.00 pm | Retired Teacher's Meet<br>Suvisesa Sangam | Pastoral Centre<br>Pinkulam |
| 05-08.02.2023 | Sunday-Wednesday | | | Bangalore |
| 11.02.2023 | Saturday | | Orientation Class | MCC |
| 12.02.2023 | Sunday | | Holy Mass | Dharmapuri |
| 12-17.02.2023 | Sunday - Friday | | Annual Retreat | Palai |
| 19.02.2023 | Sunday | | MCCL Celebrations | |
| 21.02.2023 | Tuesday | | Preaching | Vettumani |
| 25-26.02.2023 | Saturday - Sunday | | Diocesan Convention | |
| 26.02.2023 | Sunday | | Holy Mass | Charooor |
| 27-28.02.2023 | Monday - Tuesday | | Holy Episcopal Synod | Tvm |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 20 பெப்ரவரி 2023 இதழ். 2

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***

***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***

***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***

***Diocese of Marthandam***



# THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH

MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004

Prot. No. CCL 1/2023 19.01.2023

## Circular

### காதோலிக்கா தினம் - 2023

மேதகு ஆயர்களே, வணக்கத்திற்குரிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, றம்பான்மார்களே, மதிப்பிற்குரிய குருக்களே, திருத்தொண்டர்களே, இருபால் துறவிகளே, ஆண்டவரில் அன்பிற்குரிய விசுவாசிகளே!

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை சுயஆட்சி அதிகாரம் பெற்ற உயர் பேராயத் திருஅவையாக உயர்த்தப்பட்டதன் 18-ம் ஆண்டு விழாவை 2023 பிப்ரவரி 5-ம் நாள் கொண்டாடுகிறோம். இந்நாளை காதோலிக்கா தினம் என அழைக்கிறோம். நமது திருஅவையை பராமரித்து வழிநடத்துகின்ற இறைவன் நமக்கு தரும் எண்ணிலடங்காத ஆசீர்வாதங்களுக்காக திருஅவையாக இணைந்து நன்றி சொல்லுவோம். “ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்; ஏனெனில் அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு” (திபா 103:1). நமது திருஅவையின் திருப்பணிகளில் இறையாசீர் பொழியப்பட தொடர்ந்து மன்றாடுவோம். செயல்படத்தூண்டும் நம்பிக்கையால் உந்தப்பட்டு அர்ப்பணமனபாங்குடன் திருஅவை திருப்பணிகளை செய்திட செபத்துடன் உறுதி எடுப்போம். திருஅவை மக்கள் அனைவருக்கும் காதோலிக்கா தின ஆசீரை திருஅவை மக்கள் அனைவருக்கும் தெரிவிப்பதில் மகிழ்கிறேன்.

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவையில் 12 மறைமாவட்டங்கள் மற்றும் மறைப்பணித்தளங்கள் வாயிலாக உலகின் பல்வேறு பகுதிகளில் மறைதூது பணிக்கான புதிய வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன. அனைத்துலக திருஅவையில் நமது திருஅவை மறைத்தூது பணிக்கான எழுச்சியை பகிர்ந்தளிக்கிறது. இதனை நன்றி கலந்த ஜெப உணர்வுடன் உள்ளத்தில் பதிவு செய்வோம். 1930-ம் ஆண்டு இறைஊழியர் பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் தலைமையில் நடந்த மறுவொன்றிப்பு இயக்கம் மூலம் நமது திருஅவை தோன்றியது.

நல்நினைவுக்குரிய மேதகு ஆயர்கள், குருக்கள், துறவிகள், நற்செய்தி பணியாளர்கள் போன்றோரின் தியாகம் கலந்த அர்ப்பண வாழ்வால் திருஅவை வளர்ந்தது. 'உலகில் அதிவிரைவில் வளரும் திருஅவை' என்று புனித 2-ம் யோவான் பவுல் திருத்தந்தை குறிப்பிட்டார். இது நம் திருஅவைக்கு கிடைத்த அங்கீகாரம். எனவே தான் இத்திருஅவை சுய ஆட்சி அதிகாரம் படைத்த உயர் பேராயர் திருஅவையாக உயர்த்தப்பட்டது. காதோலிக்கா அரியணையும் நிறுவப்பட்டது. திருஅவையின் ஆசீர்மிக்க வளர்ச்சிக்காக தியாக உணர்வுடன் திருப்பணிகள் செய்யும் மேதகு ஆயர்களையும், குருக்களையும், துறவிகளையும், இறைமக்கள் சமூகத்தையும் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

கிறிஸ்தவ சமூகம் இன்று பல்வேறு சவால்களுக்கு மத்தியில் முன்னோக்கி பயணிக்கிறது. மத சுதந்திரம் தடை செய்யப்படும் சூழல்கள், நம்பிக்கையாளர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் போன்றவை நம்பிக்கையாளர் சமூகத்திற்கு வெளியில் இருந்தும் நாம் சந்தித்து கொண்டிருக்கிறோம். நம்பிக்கைக்கு சான்று பகர வேண்டியவர்கள் தரும் எதிர் சாட்சியங்கள் நம்பிக்கைக்கும், திருமரபுக்கும் எதிராக கற்பிப்பவர்களை நம்பிக்கை சமூகத்திற்கு உள்ளேயும் நாம் சந்திக்க வேண்டி வருகிறது. இச்சூழல்களின் மத்தியில் கிறிஸ்தவின் சாட்சிகளாக மாற நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவையின் உறுப்பினர் என்ற நிலையில் நமது திருஅவை வாயிலாக நாம் சாட்சிகளாக மாற வேண்டும். கிறிஸ்துவின் திருஅவையாகும் தாய் தண்டுடன் இணைந்து நின்று சாட்சிகளாக மாறிய திருஅவை தந்தையர்கள் நமக்கு சிறந்த முன்மாதிரியாக உள்ளனர். திருத்தூதராகிய தூய பவுல் தமது திருமுகங்கள் வாயிலாக திருஅவை என்பது என்ன என்று தெளிவுப்படுத்துகிறார். ''திருச்சபையே அவரது உடல். எங்கும் எல்லாவற்றையும் நிரப்புகின்ற அவரால் அது நிறைவு பெறுகின்றது" (எபே 1:23). "திருச்சபையாகிய உடலுக்குத் தலையும் தொடக்கமும் அவரே" (கொலோ 1:18). என கொலோசையருக்கு எழுதிய திருமுகத்தில் திருத்தூதர் கற்பிக்கிறார்.

நாம் அனைவரும் கிறிஸ்துவின் மறைஉடலின் உறுப்புக்கள் திருமுழுக்கில் நாம் பெற்றுக் கொண்ட தூய ஆவியின் அருள்பொழிவு திருஅவை வாயிலாக தொடர்கிறது. 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம்



பின்வருமாறு கற்பிக்கிறது: "கிறிஸ்துவில் நாம் நிரந்தரமாக புதிதாக்கப்பட வேண்டும். இதற்காக அவர் தமது ஆவியை வழங்கியுள்ளார். இந்த ஆவியானவர் நமது தலையிலும், உறுப்புக்களிலும் ஊடுருவி உடல் முழுவதையும் உயிரோட்டம் உள்ளதாக்கி, ஒன்றுப்படுத்தி செயல்பட தூண்டுகிறார்" (LG7). இடைவிடா இறைவேண்டலாலும் அருளடையாளங் களை பெற்றுக் கொண்டதாலும் தூய ஆவியின் செயல்பாட்டை நம்மில் ஒளிரச் செய்து திருஅவையை வலுப்படுத்துவோம். இது நமது கூட்டுப்பொறுப்பு என்பதை மறந்துவிட வேண்டாம். இறைதூண்டுதலினால் திருஅவை தந்தையர்கள் வாயிலாக நாம் பெற்றுக்கொண்ட கூட்டுப்பொறுப்பை உணர்ந்து ஒரு புது அர்ப்பணத்திற்கு காதோலிக்கா தினம் நம்மை அழைக்கிறது.

2030-ம் ஆண்டு மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவை கொண்டாட இருக்கிறோம். திருஅவையின் திருப்பணிகளை உற்சாகப்படுத்துவதற்காக திருஅவையிலும், மறைமாவட்டங்களிலும் பல்வேறு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பல்வேறு பணிக்குழுக்களின் தலைமையில் முன்வைக்கப்படும் முயற்சிகளில் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும். இதன்மூலம் திருஅவையை வலுப்படுத்துவோம்.

நூற்றாணடு விழாவிற்கு ஆயத்தமாகும் வகையில் திருஅவையின் அனைத்து குருக்களுக்கும் தொடர்பயிற்சி ஒன்று காதோலிக்கா மையத்தில் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது. 50 நபர்கள் கொண்ட குழுக்களாக இணைந்து 5 நாள் பயிற்சிகள் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த 3 வருடங்களில் இது நிறைவு பெறும். இத்தொடர்பயிற்சி வெற்றிகாண அனைவரும் இறைவேண்டல் செய்யும் படி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

நமது திருஅவையின் 27-வது சாதாரன ஆயர் மாமன்றம் 2023 பிப்ரவரி 27 முதல் மார்ச் மாதம் 3-ம் தேதி வரை காதோலிக்கேட் மையத்தில் நடைபெறுகிறது. ஆயர் மாமன்றம் சிறப்புற நடைபெற இறையாசீர் வேண்டி அனைவரும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவையின் பல்வேறு பொதுவான திருப்பணிகளையும் ஆயர் மாமன்ற பணிக்குழு செயல்பாடுகளையும் உயர் பேராயக் கூரியா (காதோலிக்கேட் மையம்) ஒருங்கிணைக்கிறது. திருஅவை மக்களின் உளமார்ந்த உதவிகளாலும், ஒத்துழைப்பாலும் இம்மையம் செயல்பட்டு வருகிறது. காதோலிக்கா

தினத்தில் நாம் வழங்கும் காணிக்கைகளை இத்திருப்பணிகளுக்காக நாம் பயன்படுத்துகிறோம். காதோலிக்கேட் மையம் ஒருங்கிணைக்கும் திருநிகழ்வுகளுக்கும், திருஅவையின் பொது திருப்பணிகளுக்காகவும் நீங்கள் நன்கொடைகள் வழங்கி உதவுமாறு திருஅவை மக்களுக்கு அழைப்பு விடுகின்றேன்.

பங்கு தந்தையர்கள் இதனை முன்னரே அறிவித்து இறைமக்களை உற்சாகப்படுத்த வேண்டும். பங்குகள் மட்டுமல்ல நமது நிறுவனங்கள், துறவற சமூகங்கள் அவற்றின் மாகாணங்கள் யாவரும் இம்முயற்சியில் பங்கேற்க வேண்டும். மறைமாவட்ட ஆயர்கள் தங்கள் மறைமாவட்டத்தில் உள்ள காணிக்கைகளை சேகரித்து ஆயர் மாமன்றம் முடிவு செய்த விகிதத்தை அடுத்து வரும் ஆயர் மாமன்ற கூட்டத்தில் ஒப்படைக்க வேண்டும். துறவற சமூகங்களின் தலைவர்கள், மாகாண தலைவர்கள், தங்கள் துறவற சமூகத்தின் நன்கொடைகளை காதோலிக்கேட் நிதி அலுவலகத்தில் ஆயர் மாமன்றத்திற்கு முன்னதாக ஒப்படைக்க வேண்டும். இம்முயற்சியில் கடந்த ஆண்டுகளில் தாராள மனதுடன் ஒத்துழைந்த அனைவருக்கும் நன்றி கூறி மகிழ்கிறேன்.

காதோலிக்கா தினத்தில் திருப்பலிக்கு பின் நமது பங்குகளிலும், மறைபரப்பு தளங்களிலும், நிறுவனங்களிலும் காதோலிக்கா கொடி உயர்த்தி உறுதிமொழி எடுத்து கொள்ள வேண்டும். இ ந்நாளில் உலகின் பல்வேறு பகுதிகளில் நமது திருஅவையின் திருப்பணியில் மூழ்கி இருக்கும் மேதகு ஆயர்களையும், குருக்கள், துறவிகளையும், இறைமக்களையும் சிறப்பாக பாராட்டி நன்றி கூறுவதுடன் உங்களுக்கான செபத்தையும் வாக்களிக்கிறேன்.

கடவுளின் கருணையும், ஆசீரும் உங்கள் மேல் என்றென்றும் இறங்கி தங்குவதாக.

*இவண்,*
இறைவனில் உங்கள் எளிய ஊழியன்,

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
உயர் பேராயர் மலங்கரை கத்தோலிக்கத்
திருச்சபையின் காதோலிக்கோஸ்



**THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH**

MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004

Prot No CCL 2/2023 19.01.2023

## Circular

## இளம் குடும்பங்களுக்கான திருத்தூதுவ திருப்பணி

மேதகு ஆயர்களே, வணக்கத்திற்குரிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, றம்பான்மார்களே, மதிப்பிற்குரிய குருக்களே, திருத்தொண்டர்களே, இருபால் துறவிகளே, ஆண்டவரில் அன்பிற்குரிய விசுவாசிகளே!

இறை அருளின் அடையாளமே குடும்பம். 2019-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த 2-வது திருஅவை பேரவையில் இன்றைய குடும்பங்கள் சந்திக்கும் சவால்களை குறித்து நாம் ஆய்வு செய்தது நினைவிருக்கலாம். குடும்பங்களை குறித்த நமது மேய்ப்பு பணி முயற்சிகளுக்கு இத்திருஅவை பேரவை புது எழுச்சியையும், உற்சாகத்தையும் தந்தது.

இச்சூழலில் இளைய குடும்பங்களின் மேய்ப்பு பணி மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. புதிய குடும்பம் உருவாகி வளரும் தொடக்க காலம் திருமணம் என்னும் திருவருட்சாதனத்தால் பெறும் இறையருள் சிறப்பாக அனுபவமாகும் காலம். அதே வேளையில் குடும்ப வாழ்வின் அதிக சவால்கள் நிறைந்த காலமும் இதுவே. இளம் தம்பதிகள் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் அன்பு இறையருளில் தற்கையளிப்பாக இத்தருணத்தில் வடிவம் கொள்கிறது. இக்காலகட்டம் வாழ்வின் எல்லா சூழல்களிலும் ஒருவருக்கொருவர் இடம் தந்து வாழ்வதற்கு பயிற்சி தருகின்றது. தொடக்க நாள்களில் எடுக்கும் முடிவுகள் மிகவும் அடிப்படையானவை. இளம் தம்பதிகள் பெற்றோர்களுடன் தொடர்பு கொள்ளும் முறைகள், பிள்ளைகளின் வளர்ச்சியில் காட்ட வேண்டிய மனப்பாங்குகள், உறைவிடம், தொழில், வருமானம், வாழ்க்கை வசதிகள் போன்றவற்றில் இவர்கள் எடுக்கும் முடிவுகள் போன்றவை குடும்பத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவையாவும் திருமணத்தின் முதல் ஆண்டுகளில் தேர்ந்து தெளிந்து முடிவெடுக்க வேண்டியவை. ஆன்மீக வாழ்வில் இணைந்து பயணிக்க பயிற்சி பெறும் காலமும் இதுவே.

தகுந்த தயாரிப்புடன் அருளடையாளங்களை பெறுவதற்கும் அவை அருளும் அருள்வரங்களில் வளர்வதற்கும் உதவுவதும் மேய்ப்புப்பணி சார்ந்த மிக சிறந்த அலுவலாக திருஅவை கருதுகிறது. திருமணத்தை குறித்த திருப்பணிகளை குடும்ப நலப்பணிக்குழு திறன்பட செய்து வருகிறது. ஆனால் திருமண வாழ்வின் தொடக்க காலத்தில் தெய்வீகமாக கிடைக்கும் அருளின் வளமையை அதிக பயன் தருவதாக மாற்ற சவால்களை சந்திக்கும் இளம் குடும்பங்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டியது அவசர தேவை என உணர்கிறேன். எனவே இளம் குடும்பங்களை மேய்ப்புப்பணி சார்ந்த உடன்பயணித்தல் செய்ய ஒரு புதுப்பணிதளத்தை திருஅவையில் அமைத்துக் கொள்ள விரும்புகிறேன். இத்திருப்பணி 'இளம்குடும்பங்களுடன் பயணித்தல்' Accompanying Young Families (AYF) என அழைக்கப்படும்.

திருமண வாழ்வின் தொடக்கத்தில் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய முடிவெடுத்து அதனை கடவுளின் மாட்சிக்கு உகந்த ஒரு அர்ப்பணமாக வளரச்செய்ய இளம் குடும்பங்களுக்கு உளம் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த, சமூகம் சார்ந்த உதவிகளை வழங்குவதே இத்திருப்பணியின் நோக்கம். பாறசாலை மறைமாவட்ட ஆயர் மேதகு டாக்டர் தோமஸ் மார் எவ்சேபியோஸ் ஆண்டகை திருஅவை தளத்தில் இத்திருப்பணியை கண்காணிப்பார். அருட்தந்தை தோமஸ் மடுக்கமூட்டில் இதன் செயலராகவும், அருட்சகோதரி மேரி டோமினிக் துணை செயலராகவும் திருப்பணி செய்வர்கள். இத்திருப்பணியின் தொடக்க பணிநிலைகளை குறித்த கையேடு தயார் நிலையில் உள்ளது. இதனை குறித்து அதிகமாக ஆலோசனை செய்யவும் சூழலுக்கு ஏற்ற புதுப்பித்தல்கள் செய்யவும் ஆலோசனை குழுக்களும் கால தாமதமின்றி ஏற்படுத்தப்படும்.

திருமணம் முடிந்து 10 ஆண்டுகள் வரை உள்ளவர்கள் வயது வரம்பின்றி இத்திருப்பணி குழுவில் உறுப்பினராக இருப்பர். இதன் உறுப்பினராக இருப்பவர்கள் திருஅவையின் பிற இயக்கங்களிலும் பொறுப்புகளிலும் பணியாற்றுவதற்கு ஏந்த தடையும் இல்லை.

இத்திருப்பணியின் முதல் பணித்தளம் பங்கு. இத்திருப்பணியின் ஆன்மீக வழிகாட்டிகள் பங்கு தந்தையர்கள். அதிக இளம் குடும்பங்கள் உள்ள பங்குகளில் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க இளம் தம்பதிகளிலிருந்து ஒருவரை செயலராக தேர்ந்தெடுக்கலாம். இளம் தம்பதிகளின் ஆன்மீக வாழ்வை வலுப்படுத்துதல், குடும்ப வாழ்வை வலுப்படுத்துதல், இளம் தம்பதிகளை திருஅவை வாழ்வில் பங்கேற்க வைப்பது போன்றவற்றில் நாம் தனிக்கவனம் செலுத்த வேண்டும். இத்திருபணி மறைமாவட்ட அளவிலும், மறைவட்ட அளவிலும்



ஒருங்கிணைக்கப்படுகிறது. மறைமாவட்ட அளவில் ஓர் அருட்தந்தை இதன் இயக்குநராக இருப்பார். அருட்சகோதரி ஒருவர், பொதுநிலையினர் ஒருவர் என இருவரை மறைமாவட்ட ஆயர்கள் செயலராக நியமனம் செய்வார்கள். மறைவட்ட அளவில் இது உடனடியாக செயல்படுத்தப்படும். இளம் தம்பதிகளை ஆன்மீகமாகவும் மனதளவிலும் வலுப்படுத்த உதவும் செயல் திட்டங்கள் வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். தம்பதிகளுக்கு இடையே பிரச்சனைகள் எழுமானால் தகுந்த பரிகாரம் காண உதவி செய்ய வேண்டும். இளம் குடும்பங்களின் தனியுரிமைகளை மதித்து அவர்களது மனதொன்றிப்பையும், ஆன்மீக வளர்ச்சியையும் இலட்சியமாக்கி பொறுப்புடன் திருப்பணி செய்யும் குருக்களும், துறவிகளும், பிற நிபுணர்களும் அடங்கிய நிபுணர் குழுவை மறைமாவட்ட அளவிலும், மறைவட்ட அளவிலும் உருவாக்க வேண்டும். இக்குடும்பங்களை உருவாக்க தேவையான வழிகாட்டுதல்கள் பொறுப்பில் இருப்பவர்களுக்கு வழங்கப்படும். இப்பணிதுறையில் செயல்படுகிறவர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்க திட்டங்கள் வகுக்கப்படும். இளம் தம்பதிகளுக்கான தியானம், தேவைப்படும் நேரங்களில் ஆலோசனை வழங்குதல் போன்றவற்றிற்கான வசதிகளை மறைமாவட்ட அளவில் நிறுவுவதே சிறந்தது.

கடந்த 10 ஆண்டுகளில் (ஜனவரி 12 முதல்) திருமணமான அனைவருடையவும் விவரப்பட்டியல் சேகரிப்பதற்கு ஒரு படிவம் அனைத்து பங்குகளிலும் வழங்கப்படும். குறிப்பிட்ட நேரத்தில் விவரப்பட்டியலை பூர்த்தி செய்து உதவுமாறு பங்குத்தந்தையர்களை கேட்டுக்கொள்கிறேன்.

நமது திருஅவை எடுத்திருக்கும் இப்புது முயற்சி வெற்றிப்பெற, அருள் வாழ்வு செழிக்க, அனைவரும் இறைவேண்டல் செய்யும்படி அன்புடன் நினைவுப்படுத்துகிறேன். மேய்ப்பு பணியில் ஈடுபடுபவர்கள் தங்கள் பொறுப்புகளை கவனமுடனும், பொறுப்புடனும் செய்ய வேண்டும். திருஅவை தரும் வழிகாட்டுதலை அனைவரும் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டுமென்று ஆண்டவர் பெயரால் அறிவுறுத்துகிறேன்.

*இவண்,*

இறைவனில் உங்கள் எளிய ஊழியன்,

+Baselios Cleemis

**† மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
உயர் பேராயர் மலங்கரை கத்தோலிக்கத்
திருச்சபையின் காதோலிக்கோஸ்

# குருமட செய்திகள்

## அருட்சகோதரிகளோடு சந்திப்பு

25/02/2023 (புதன்கிழை) அன்று இளம்குருமடத்தின் இளம் அருட்சகோதரர்கள் அதிபர் தந்தை மற்றும் துணை அதிபர் தந்தையின் தலைமையில் மார்த்தாண்டம் மேரிமக்கள் கன்னியர் இல்லத்தில் திருஅவையின் வளர்ச்சிக்காக தம் வாழ்வினை அர்ப்பணித்து தியாகங்கள் பலவற்றை சகித்த மூத்த அருட்கன்னியர்களை சந்தித்தனர். இக்கூடுகையில் அனுபவமிக்க அருட்கன்னியர்கள், இளம் அருட்சகோதரர்களுக்கு தங்கள் நற்செய்தி பணியையும், சந்தித்த



சவால்களையும் அனுபவமாக எடுத்து கூறினர். அருட்சகோதரர்களுக்கு அவர்களின் பணிவாழ்வின் அனுபவம் மிகவும் ஊக்கமூட்டுவதாக அமைந்தது.

## குடியரசு தினவிழா

26.01.2023 (வியாழக்கிழமை) குடியரசு தினத்தை முன்னிட்டு காலையில் திருப்பலியும் அதனை தொடர்ந்து துணை அதிபர் தந்தை மற்றும் ஆன்மீக தந்தையின் தலைமையில் தேசியக் கொடியானது உயர்த்தப்பட்டது.



# மேரி மக்கள் துறவற சபை

வெள்ளி விழா கொண்டாட்டங்கள் மேரி மக்கள் துறவற சபையின் 2022 ஆண்டு வெள்ளிவிழா காணும் அருட்சகோதரிகளுக்கு வெள்ளிவிழா கொண்டாட்ட நிகழ்வுகள் மிக சிறப்பாக நடைபெற்றது. 09.01.2023 அன்று காலை 6 மணிக்கு சிறப்பு ஜெபமும் தொடர்ந்து மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை மற்றும் கூரிய ஆயர் ஆன்றணி மார் சில்வானோஸ் ஆகியோர் தலைமையில் நன்றித் திருப்பலியும் நடைபெற்றது. அதை தொடர்ந்து அருட்சகோதரிகளை வாழ்த்தும் விதமாக வாழ்த்துக் கூட்டமும் மிக சிறப்பாக நடைபெற்றது. இந்த வருட வெள்ளிவிழா காணும் அருட்சகோதரிகள் Sr. மேரி பிரசாத், Sr. செலின் மேரி, Sr. மேரி புஷ்பம், Sr. மரிய கிரேசி, Sr. ஸவிதா, Sr. அருள்தெரஸ் ஆகியோருக்கு வெள்ளிவிழா நல்வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கிறோம்.

## வருடாந்திர தியானம்

மேரி மக்கள் துறவற சபையின் 2022-2023 ஆண்டின் வருடாந்திர தியானம், மார்த்தாண்டம் மாகாணத்தாய் இல்லத்தில் வைத்து 15.01.2023 முதல் 21.01.2023 வரை நடைபெற்றது. இதில் 80 அருட்சகோதரிகள் கலந்து கொண்டனர். அருட்தந்தை பென்னி அவர்கள் தியானத்தை வழிநடத்தினார்கள்.



# MCYM
*Youth Apostolate*

இளையோர்களுக்கான மறைமாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் ஜனவரி 15-ம் தேதி சூரியகோடு புனித எப்ரேம் பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் வைத்து நடைபெற்றது. மறைவட்டத்தில் முதலிடம் பிடித்த இளையோர்கள் கலந்து கொண்டனர். வெற்றிபெற்றவர்களுக்கு மறைமாவட்ட இளையோர் இயக்க இயக்குநர் அருள்தந்தை ஜோணி ஆல்பிரட், இணை இயக்குநர் அருட்தந்தை வில்பின் விஜூ, அருட்சகோதரி ஊக்குநர் அருட்சகோதரி பிளவர் ஜோண் DM ஆகியோரால் பரிசுகள் வழங்கப்பட்டது.

# MCA
## Diocese of Marthandam

**மறைமாவட்ட MCA பதவியேற்பு**



மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA 2023 -2024 வருடங்களுக்கான புதிய பொறுப்பாளர்கள் பதவியேற்பு நிகழ்வானது 29.01.2023 அன்று பிற்பகல் 2 மணிக்கு ஆயர் இல்லம், வெட்டுவெந்நியில் வைத்து மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் குருகுல முதல்வர், M.C.A. ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை இராபின்சன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. முதலில் குழித்துறை மறைமாவட்ட அருட்தந்தை ஜெரால்டு அவர்கள் தியான உரை வழங்க, தொடர்ந்து தலைவராக திரு. எட்வர்டு ஜாண், பொதுச்செயலராக திரு. K.C. பிரைட், பொருளராக திரு. இராபின்சன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் என மொத்தம் 25 பேர் பதவியேற்றுக் கொண்டனர்.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

**தொழில் முனைவோர் பயிற்சி**



குடும்ப வளர்ச்சி திட்டத்தின் வழியாக தற்போது 450 குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன. அவர்களுக்கு 12.01.2023 மற்றும் 13.01.2023 ஆகிய இரண்டு தினங்களில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து திரு. அலோசியஸ் அவர்களால் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள். பயிற்சியில் சிறு தொழில் செய்வதன் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. பின்னர் இந்த திட்டம் வழியாக ஆறாண்டுகள் பயன் பெற்ற திருமதி. வைலா அவர்கள் இந்த திட்டம் வழியாக தங்கள் குடும்பம் அடைந்த நன்மைகள் குறித்த தங்கள் அனுபவத்தை பகிர்ந்தார்கள். பின்னர் பயனாளிகளுக்கு திட்டத்தின் வழிமுறைகளும், அவற்றை கையாளும் வழிமுறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. இந்த பயிற்சியில் 200 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

**பிற நிகழ்வுகள்**

07.01.2023 அன்று கோல்பிங் நிர்வாக குழு கூட்டம் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 09.01.2023 அன்று குடும்ப வளர்ச்சி திட்டத்தின் வருடாந்திர திட்டமிடல் கூட்டம் மிட்ஸ் இயக்குநர் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. 09.01.2023 அன்று மிட்ஸ் மற்றும் ஆஸ்திரேலியாவை சேர்ந்த திரு. கிரேக் ஹோலண்ட் அவர்களின் உதவியுடன் மிட்ஸ் பணி மண்டலங்களில் உள்ள 35 பயனாளிகளுக்கு 350 கோழிகள் வழங்கப்பட்டன. பயனாளிகளின் இல்லங்கள் சந்திக்கப்பட்டது. 17.01.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மிட்ஸ் பணியாளர்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. விழாவினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் முன்னின்று நடத்தினார்கள்.

## HEALTH FOR ONE MILLION (HOM)
### Diocese of Marthandam

HOM அலுவலக பணியாளர்கள் மற்றும் ஆர்கனைசர்களின் மாதாந்திர ஆலோசனை கூட்டம் 13.01.2023 அன்று HOM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை ராபர்ட் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் நடைபெற்றது. HOM பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். திருமதி லதா அவர்கள் அறிக்கை வாசித்தார்கள். HOM கணக்காளர் திருமதி செல்வி அவர்களால் கணக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் HOM வழியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.




ஜனவரி மாதம் 20-ம் தியதி HOM மற்றும் சிறப்புப் பள்ளியை பார்வையிடுவதற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்த ஜெர்மனி நாட்டைச் சார்ந்த திருமதி சுசன்னா லிம்பக் அவர்களுக்கு HOM சார்பாக சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் HOM சார்பாக கொட்டாரம், கன்னியாகுமரி, மார்த்தாண்டம் மற்றும் நாகர்கோவில் அலகுகளில் படுக்கை நோயாளிகளாக இருக்கும் 55 முதியவர்களுக்கு ஊட்டச்சத்து உணவுகள் ஒவ்வொரு மாதமும் HOM இயக்குநர் அருட்தந்தை ராபர்ட் அவர்களால் வழங்கப்பட்டு வருகிறது.



மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் மார்த்தாண்டம் மெடிக்கல் மிஸன் சார்பாக பேதுருவின் கரங்கள் என்னும் மாதாந்திர மருத்துவ உதவித் திட்டம் செயல்பட்டு வருகிறது தற்போது 42 நிரந்தர நோயாளிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் மாதத்திற்குரிய உதவித்தொகை 20.01.2023 அன்று HOM அலுவலக வளாகத்தில் வைத்து அருட்தந்தை ராபர்ட் அவர்கள் தலைமையில் ஜெர்மனி நாட்டைச் சார்ந்த திருமதி சுசன்னா லிம்பக் அவர்களால் வழங்கப்பட்டது.



மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் HOM மற்றும் தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு சார்பாக இதயம் காப்போம் என்னும் விழிப்புணர்வு கருத்தரங்கம் 23.01.2023 அன்று கிராத்தூர் மார் கிறிஸ்லோஸ்றோம் கல்வி இயல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. கருத்தரங்கை தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு செயலாளர் அருட் சகோதரி ஜோஸ்பின் வழிநடத்தினார். HOM இயக்குநர் அருட்தந்தை ராபர்ட், கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை S. வர்கீஸ், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.




## ஆயரின் நலத்திட்ட உதவிக்கான நன்கொடைகள்

| தியதி | பெயர் | பங்கு | தொகை |
|---|---|---|---|
| 15/01/2023 | | தூய தைநேசிமாதா திருத்தலம் பார்வதிபுரம் | 5,000/- |
| 15/01/2023 | திருமதி. மோனி அலெக்சாண்டர் | தூய தைநேசிமாதா திருத்தலம் பார்வதிபுரம் | 10,000/ |

## ஆயரின் நலத்திட்ட நன்கொடை பயனாளிகள்

| தியதி | பெயர் | பங்கு | தொகை |
|---|---|---|---|
| 03/02/2023 | திருமதி. ரெதி மேரி | மார்த்தாண்டம் | 5,000/- |

# மறைவட்ட செய்திகள்

## குலசேகரம் மறைவட்டம்

குலசேகரம் மறைவட்ட தினமானது 08-01-2023 அன்று புனித சூசையப்பர் மலங்கரை கத்தோலிக்க தேவாலயம், அணக்கரை பங்கு வளாகத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள். மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், இறைமக்கள் சமூகமும் இணைந்து இந்நிகழ்வுகளை ஒழுங்குப்படுத்தினர். இந்நிகழ்வில் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையுரையாற்ற, மாத்தார் பஞ்சாயத்து தலைவர் திரு. பால்சன் அவர்கள் சிறப்புறையாற்றினார்கள். இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகள் 10 மற்றும் 12- வகுப்பு அரசு பொது தேர்வில் முதல் இரண்டு இடம் பெற்ற மாணவர்களுக்கும், MCYM போட்டிகளில் முதலிடம் பெற்ற மாத்தார் பங்கிற்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியில் மறைவட்ட முதன்மை குரு அவர்கள் நன்றி கூற நிகழ்வுகள் இனிதாய் நிறைவுற்றன.

புனித தேவசகாயத்தின் திருப்பண்டம்14-01-2023 அன்று குலசேகரம் மறைவட்டத்திற்கு கொண்டுவரப்பட்டு ஒவ்வொரு பங்குகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. ஒவ்வொரு பங்குகளிலும் அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் மற்றும் இறைமக்கள் சமூகம் இணைந்து திருப்பண்டத்தை வரவேற்று, புனிதருக்கு வணக்கம் செலுத்தி, புனிதரின் புனிதத்தை ஆழமாக அறிந்து அவர் பரிந்துரையை நாடி ஜெபித்தார்கள்.

## பனச்சமூடு மறைவட்டம்

31-01-2022 அன்று புனித சூசையப்பர் அரங்கம், பனச்சமூட்டில் வைத்து பாலர்சபை தினம் மற்றும் போட்டிகளை இயக்குநர் அருட்தந்தை ஆன்றோ ஜெபின் அவர்கள் முன்னின்று நடத்தினார்கள். இக்கூட்டத்தில் பேரருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத் அவர்கள் தலைமையுரையாற்ற பேரருட்தந்தை பீட்டர் ஆனந்த் மற்றும் அருட்தந்தை ஜோணி ஆல்பிரட் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்வுகளில் மறைவட்டத்திலுள்ள எல்லா பங்குகளிலிருந்தும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



# St. Mary's CBSE School, Mariagiri

## தமிழர் திருநாள்



தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை ஒட்டி, எம்பள்ளியில் பொங்கல் விழா 13.01.2023 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் முதல்வர் அருட்சகோதரி சோபி அவர்கள் தமிழர் திருநாளை பற்றி சிறப்புரை நிகழ்த்தினார்கள். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

## 74–வது குடியரசு தினம்

நம் நாட்டின் 74-வது குடியரசு தினத்தை முன்னிட்டு 25.01.2023 அன்று குடியரசு தினவிழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் தாளாளர் அருட்தந்தை வினு குமார் அவர்கள் தேசிய கொடியேற்றி வைத்து, தலைவர் உரை நிகழ்த்தினார்கள். தேசபற்றை வளர்க்கும் வகையில் மாணவர்களுக்கு இடைஇடையே கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

# ST. PAUL'S IAS ACADEMY

## Kanyakumari, Kuzhithurai, Mariagiri

### DIOCES OF MARTHANDAM

St. Paul's IAS Academy -யின் புதிய கிளையானது நவம்பர் 21-ம் தேதி குழித்துறை மார் எஃப்ரேம் வளாகத்தில் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. புனித பவுல் IAS அகாடமியானது 2011-ம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இங்கு படித்த மாணவர்களில் 350-க்கும் அதிகமான மாணவர்கள் பல்வேறு அரசு துறை சார்ந்த தேர்வுகளில் வெற்றி பெற்று பணிபுரிகின்றனர்.

இங்கு UPSC, SSC, TNPSC, Banking, Railway, Defence, Neet, Foundation Course for Competitive Examinations, TET போன்ற போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 7/01/2023 அன்று சூரியகோடு புனித எப்ரேம் ம.சி.க மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களின் தலைமையில் தொடங்கப்பட்டது.

# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

## பொங்கல் விழா

மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளையில் பொங்கல் விழாவானது 13.01.2023 அன்று மதியம் 2 முதல் 5 வரை உள்ள நேரத்தில் நடைபெற்றது. அருட்தந்தை ஜோஸ்பின்ராஜ் அவர்கள் தலைமையிலும், முதல்வர் முனைவர் லெனின்ரெட் அவர்கள் முன்னிலையில் அனைத்து துறை மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் விதவிதமாக பொங்கலிட்டு சிறப்பு செய்தார்கள். பொங்கல் போட்டி நடத்தி வெற்றி பெற்ற குழுவினை பாராட்டினார்கள். "பொங்கல் பொங்கியது போல் நம் உள்ளங்களும் மகிழ்ச்சியால் பெருகட்டும்'' என்று



தாளாளர் தந்தை வாழ்த்தினார்கள். தொடர்ந்து அனைவருக்கும் இனிப்பு பரிமாறப்பட்டது. மிகவும் இனிதே முடிவடைந்தது.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**பெப்ரவரி** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 10, 11 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# MARY MOUNT CBSE SCHOOL
## ANAKKARAI

### விளையாட்டு தினம்





ஜனவரி 25,2023 மேரிமவுண்டு சி.பி.எஸ்.இ பள்ளியில் விளையாட்டு தினமானது காலை 9.30 மணியளவில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக காவல்துறை துணை ஆய்வாளர் திருமதி. விஜிகலா, ஜெர்மன் நாட்டை சார்ந்த திருமதி. சூசன்னா லிம்பாக் ஆகியோர் கலந்து கொண்டனர். துணை ஆய் வாளர் திருமதி. விஜிகலா தேசியக் கொடி ஏற்றி விழாவினை தொடங்கி வைத்தார். பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் அனைவரையும் வரவேற்றார்.

நான்கு வெவ்வேறு வீடுகளின் அணிவகுப்பான மார்ச் பாஸ்ட் மற்றும் நடைபெற்றது. அதனை தொடர்ந்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. அனைத்து மாணவர்களும் போட்டியில் கலந்து கொண்டனர். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை உற்சாகப்ப டுத்தினர். தலைமை ஆசிரியர் வெற்றி பெற்ற மாணவர்களின் சிறப்பு செயல் பாட்டிற்காக பாராட்டினார்.

மேரிமவுண்டு சி.பி.எஸ்.இ பள்ளியில் மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தும் விதமாக கலை நாளானது ஜனவரி 9,2023 அன்று காலை 11.00 மணியளவில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

மாணவர்களுக்கு பல்வேறு கலைப்போட்டிகள் நடத்தப்பட்டது. அதில் அனைத்து மாணவர்ளும் மிகவும் ஆர்வத்துடன் பங்கு கொண்டு தங்களின் திறமையை வெளிப்படுத்தினார்கள். நடுவர்கள் முன்னிலையில் வெள்ளி வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். போட்டியானது மதியம் 2.30 மணியளவில் முடிவடைந்தது.

# ஆயரின் ஜனவரி மாத நிகழ்வுகள்



- 1 ➢ மஞ்சத்தோப்பு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.
- 1 ➢ வாழோடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.
- 2 ➢ அருட்தந்தை பிரேம்குமார் அவர்களின் அம்மாவின் இறுதி நல்லடக்க திருச்சடங்கிற்கு தலைமைத் தாங்கினார்.
- 3 ➢ செறியநாடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 6 ➢ கிராத்தூர் மார் கிரிகோரியோஸ் பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கி தலைமை உரையாற்றினார்.
- 8 ➢ அருட்தந்தை தோமஸ் விளையில் அவர்களின் 50-வது ஆண்டு நினைவை முன்னிட்டு புத்தூர் ஆலயத்தில் நினைவு திருப்பலி நிறைவேற்றினார்.
- 8 ➢ குலசேகரம் மறைவட்ட ஆண்டு விழாவில் தலைவர் உரையாற்றினார்.



- 8 ➢ அருட்தந்தை ஜிபு மேத்யூ அவர்களின் அப்பாவின் இறுதி நல்லடக்க திருச்சடங்கிற்கு தலைமைத் தாங்கினார்.
- 8 ➢ துறவற வாழ்வில் இருபத்தி ஐந்து ஆண்டு நிறைவை கொண்டாடிய மேரிமக்கள் அருட்சகோதரிகளின் ஜூபிலி நன்றி திருப்பலிக்கு தலைமைத் தாங்கினார்.
- 9 ➢ கோட்டார் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குமரி மாவட்ட கிறிஸ்தவ ஐக்கிய பேரவையின் கூடுகையில் கலந்துக் கொண்டார்.
- 10 ➢ குடப்பனங்குந்நு மேரிமக்கள் மாகாண அருட்சகோதரிகளுக்கு சிறப்பு வகுப்பை வழிநடத்தினார்.
- 11-12 ➢ கோயம்புத்தூரில் நடைபெற்ற நற்செய்தி பெருவிழாவை வழிநடத்தினார்.
- 13 ➢ நட்டாலம் தூய தேவசகாயம் திருத்தலத்தில் மறையுரையாற்றினார்.
- 14 ➢ தூய தேவசகாயத்தின் திருநாளை முன்னிட்டு பெருவிளை திருத்தலத்தில் புனிதரின் திருப்பொருள் நிறுவி, திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 14 ➢ நடைக்காவு ஆலயத்தில் வைத்து திருமுழுக்கு வழங்கினார்.
- 15 ➢ பார்வதிபுரம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 15 ➢ ஆயூர் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.
- 16 ➢ சிங்கம்பாறை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 16 ➢ கருங்கல் தமிழ்ச்சங்கம் சார்பில் நடைபெற்ற விழாவில் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார்.
- 17 ➢ திருச்சியில் நடைபெற்ற தொழிலாளர் சங்க கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.
- 18 ➢ தூத்துக்குடியில் வைத்து நடைப்பெற்ற தமிழக ஆயர் பேரவை கூடுகையில் கலந்துக் கொண்டார்.
- 20 ➢ கிராத்தூர் தமிழ்வழி பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கி தலைவர் உரையாற்றினார்.
- 20 ➢ அம்பிலிகோணம் புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

21 ➢ மார்த்தாண்டம் மேரி மக்கள் மாகாண இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

21 ➢ மாடத்தட்டுவிளை ஆலயத்தில் மாலைவழிபாட்டு ஆராதனைக்கு தலைமைத் தாங்கினார்.

22 ➢ தோட்டவாரம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

23 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace); பற்றி வகுப்பு எடுத்தார்.

23 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவையின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

25 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற Collage Board கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

25 ➢ மார் இவானியோஸ் பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கி தலைவர் உரையாற்றினார்.

26 ➢ மேய்ப்பு பணி இல்லத்தில் வைத்து நடைபெற்ற மறைக்கல்வி ஆசிரியர்களின் சங்கமத்தில் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார்.

26 ➢ மணலிக்கரை ஆலய அர்ச்சிப்பில் கலந்துக் கொண்டு மறையுரையாற்றினார்.

27 ➢ பாலவிளை பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கி தலைவர் உரையாற்றினார்.

28 ➢ மேதகு ஆயர் ஜோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாட்டின் 25 ஆண்டு ஜூபிலி நிறைவு விழா மற்றும் நாமவிழா திருப்பலியில் கலந்துக்கொண்டார்.

29 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட MCA பொறுப்பாளர்கள் பதவி ஏற்பு நிகழ்விற்கு தலைமைத் தாங்கினார்.

29 ➢ தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்ற மரியாயின் சேனை ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

29 ➢ பொங்கமூடு ஆலய திருவிழாவில் கலந்துக் கொண்டு மறையுரையாற்றினார்.

31 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட குருக்கள் மன்ற கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.



## இம்மாதம் நினைவு கூர

பெப்ருவரி 2023

2 – மாயல்த்தோ
(நம் ஆண்டவரின் தேவாலய நுழைவு)

3 – மார் சிமியோன், மார்த்தா அன்னா

4 – புனித ஜாண் பிரிட்டோ


4

5 – கெஹேனே ஞாயிறு
காதோலிக்கா தினம்

9 – ஆபிரகாம் மார் யூலியோஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாடு

10 – மலங்கரை கத்தோலிக்க உயர் பேராய திருஆட்சிப்பீடம் நிறுவப்பட்ட நாள்

11 – புனித லூர்து அன்னை


11

12 – ஆனிதே ஞாயிறு
மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்க தினம்

13 – இறைவாக்கினர் ஆகாய்

14 – மார் க்கூஸ்தோஸ்

19 – தவக்கலத்தின் முதல் ஞாயிறு
மார் ஈசாக்கு
ஜோசப் மார் தோமஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாடு


19

20 – சுபுகோனோ

22 – தோமஸ் மார் தியோஸ்கோறஸ் ஆண்டகையின் நினைவு
திருத்தூதர் பேதுருவின் அந்தியோக்கியா திருஆட்சி பீடம் நிறுவிய நாள்
திருவனந்தபுரம் புனித மரியன்னை பேராலயம் அர்ச்சிக்கப்பட்ட நாள்

23 – சிமிர்ணாவின் புனித போளிக்கார்ப்
மேத்யூஸ் மார் போனிகோர்போஸ் ஆண்டகையின் பெயர்விழா

24 – திருமுழுக்கு யோவானின் தலை கண்டெடுக்கப்பட்ட நாள்

25 – அருளாளர் ராணி மரியா

26 – தவக்கலத்தின் இரண்டாம் ஞாயிறு

28 – இறைவாக்கினர் ஒபதியா




# புனித தேவசகாயம் திருத்தலம், பெருவிளை

## திருப்பண்ட நிறுவுதல் நிகழ்வு







